supported by a narration made by the author of "Virabhanudayakavyam". "For every song and each tana and each Dhrupad, the Raja gave a crore of rupees to this musician, namely Tansena who was the embodiment of the art of music. *(Extracted by Swami Prajnananda in "A Historical Study of Indian Music", Page 177).* This statement may be an exaggeration but the praise for the tanas of Tansena gives credence to this view.

If this surmise gets the approval of the musicologists then the only possible conclusion can be that Venkatamakhi's intention in writing the book was the omission of certain swaras in certain ragas is also indicated as well as the time for singing the ragas.

The nineteen melas adopted by Venkatamakhi in this prakarana include his own new find "Simharava Mela" and the two melas derived by him, namely Kalyani and Pantuvarali. Of these nineteen melas, thirteen have but one raga each - Mukhari, Samavarali, Vasantabhairavi, Ahiri, Bhairavi, Samanta, Desakshi, Nata, Suddhavarali, Pantuvarali, Suddharamakriyaa, Simharava and Kalyani. Two of the melas have two ragas - Bhupala mela with Bhupala and Bhinna shadja and Hijjijji mela with ragas Hijjujji and Revagupti. Kambhoji mela has three ragas - Khambhoji, Kedaragowla and Narayanagowla. Sankarabharana mela has seven ragas - Shankarabharana, Arabhi, Nagadhwani, Sama, Suddhavasanta, Narayani and Narayanadesakshi. Sriraga mela has eight ragas - Sriraga, Salagabhairavi, Dhanyasi, Malavasri, Devagandhara, Andhali, Velavali and Kannadagowla. Gowla mela has fourteen ragas - Gowla, Gundakriya, Salanganata, Nadaramakriya, Lalita, Padi, Gurjari, Bhahuli, Malahari, Saveri, Chayagowla, Purvagowla, Karnatabangala and Sowrashtra.

Is it possible that the manuscript which has served the base for the printed editions had itself been reconstructed from a source with many omissions?

In the last four slokas of the Raga prakarana Venkatamakhi would state, "there are crores of desiya ragas like Kalyani but they are never fit for adoptation in gita, thaya or prabandhas. Kalyani raga is devoid of madhyama and nishada in the arohana and even though it is fit for gita, thaya and prabandha it is a favourite of the Turks and therefore it should be avoided". It is significant to note that an ardent descendent of that school, Sri Muthuswamy Dikshitar has brought out the par excellence of the raga Kalyani in inimitable patterns.

Again, of Pantuvarali, it is stated, "the raga Pantuvarali is sampoorna - it is liked by degraded people. It has to be kept at a very long distance from, gita, thaya and substantially to perpetuate the raga concepts as were in vogue during the period before the gulf between the Hindustani and Carnactic systems widened. The further conclusion is that the ragas were delineated by Muthuswamy Dikshitar in his exquisite compositions at the bid of venkata vaidyanatha Dikshitar only to preserve the ancient system of music of the Bharat and that his kriti were not just products of the influence of Hindustani music.

Slokas 26 to 105 deal with the characteristics of 55 ragas in which gitas, thayas (tanas) and prabandhas were composed by the revered Tanapparya. The graha, nyasa and amsa swaras of each raga, the upanga - bhashanga and so on, the vadi, samvadi, vivadi, anuvadi swaras, the varja swaras, the mela to which the ragas pertain and the time for singing the ragas - these details are given in them, but unfortunately, with many omissions. Occasionally there is a remark rebuking Ramamatya. *(The author of Swaramelakalanidhi, 1550)* like the comment in regard to Suddhavasanta raga in the following words -

आह बैकार रामस्तु आरोहे पञ्चमवर्जनात्।
षाडवत्वं न तद्युक्तं यस्मादस्यावरोहणात्।।
आरोहेऽपि प्रयोगोस्ति तस्मात्संपूर्णरागता।।

(Ramamatya termed this raga Suddhavasantha as a shadava raga because of the drop of panchama in the arohana - this is not appropriate, because, in the avarohana the panchama is very much present.

The ragas are grouped grahaswara-wise of the relative melas. The first thirty-one ragas all have shadja as their garha, nyasa and amsa swaras, the next three, the rishaba - the next four - the gandhara, the next three - the madhyama, the next two - the panchama, the next four - the dhaivata and the last eight - the nishada. The vadi, samvadi, anuvadi and vivadi swaras are given only for a few rafas and not for all. Of the fifty-five ragas set out in the prakarana, the vadi, samvadi, vivadi and anuvadi swaras are given only for ten ragas. Barring the nineteen mela ragas, only eight ragas are shown as raganga ragas, three as bhashanga ragas, two as upanga ragas and one as krianga raga prabandha". Can we compare this description of Pantuvarali raga with the exquisite compositions of the Sangita Trimurti and the grand setting of the fourth Ashtapadi?

Venkatamakhi sums up stating "countless and the ragas of popular origin and there are ragas of mixed derivation also. That is why they are not scanned by me individually". These words reinforce my deduction that the substantial object of Venkatamakhi was to establish firmly the ragas passed over to him through his guru from Tansen ie., the ragas of the undivided Indian music than those of Carnatic music as conceived of today.

Venkatamakhi, the author of *Chaturdandiprakasika*, while he impresses us with such clarity in the Veena prakarana, such ingenuity in Mela prakarana, such imaginativeness in Alapa prakarana and such profundity in the Prabandha prakarana, fails to impress us in the Raga prakarana. Apart from the mela - the raga association, the reader of today does not get any benefit or enlightment from the materials given in the Raga prakarana. May be, the book was not intended for theoretical self-study by numerous readers but was intended to be a class book accompanied by adequate demonstration by the teacher and thus to be passed on from mouth to ears as many other Indian books on useful arts are. O

---

*(Shri. K.N. Shrinivasan learnt classical music under the guidance of his mother (Ranganayaki Ammal, a disciple of reputed Thillaisthanam Panju Bhagavatar) and under late K.V. Srinivasa Iyengar (Author of many books on music). He is a Director of Music Circle, Srirangam; Member Advisory Experts Committee Member, Music Academy, Chennai : Member Central Audition Board, All India Radio / New Delhi and Member Programme Advisory Committee, All India Radio, Tiruchirappalli. He has written many books in Sanskrit and Tamil. At present he is compiling his own sahityas in Sanskrit with notation.)*

# SVARAGATA ADHYAYA OF SANGITA RATNAKARA

*Prof. B. Krishnamoorthi*

विघ्नोघ हारिणं सर्व भन्काभिमत कारणम्।
वारणास्यमहं वन्दे मौलावर्धेन्दु धारिणम्॥
ब्रह्मग्रन्थिज मारुतानुगतिना चिन्तेन हृत्पङ्कजे।
सूरीणामनुरञ्जकं श्रुतिपदं योऽयं स्वयं राजते।
यस्माद् ग्रामविभाग वर्णरचिनाऽलंकार जाति क्रमो।
वन्दे नाद तनुं तमुद्धर जगद्गीतं मुदेशंकरम्॥

மேற்கண்ட மங்கள ச்லோகத்தில் ஸாரங்கதேவர் நாதத்தை சரீரமாக உடைய பரமேச்வரனையும் ( नादतनुं शंकरम् ) மங்களத்தை உண்டு பண்ணும் நாதத்தையும் ( शंकरम् नादतनुं ) இரண்டுக்கும் பொருத்தமான பதங்களைக் கொண்டு மானஸிகமாக வந்தனத்தைத் தெரிவிக்கிறார்.

वेदानां सामवेऽदोस्मि வேதங்களுக்குள் ஸாம வேதமாக நான் இருக்கிறேன் என்று கீதையில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் சொல்லுகிறார். வேதங்களுக்குள் சிறந்த அந்த ஸாம வேதத்திலிருந்து ப்ருஹ்மா ஸங்கீதத்தை எடுத்துக் கொடுத்துள்ளதாக சொல்லப்படுகிறது. ஆதலால் வேதங்களை எப்படி கர்ணபரம்பரையாக லக்ஷ்யமுறையில் உதாத்த, அனுதாத்த க்ரமங்களுடன் தெரிந்து கொள்ள முடிகிறதோ அதே போல் லக்ஷ்ய ஸங்கீதமும் குருகுல முறையில் அல்லது குருசிஷ்ய பாவத்தில் வளர்ந்து வந்திருக்கிறது. வேதத்தை அப்யஸிப்பதிலும் அதற்கு ஏற்பட்ட லக்ஷணங்கள் வழுவாமல் ஒரே மாதிரியான பாட க்ரமத்துடன் இந்தியா முழுவதிலும் சிறந்து விளங்குகிறது. அதைப்போல் வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட ஸங்கீதத்திற்கும் லக்ஷண, லக்ஷ்யம் என்று தொன்று தொட்டு வந்துள்ளது. ஸங்கீதத்தில் லக்ஷ்யம் எப்படி குரு, சிஷ்ய பாவத்தால் வளர்ந்து வந்திருக்கிறதோ, அதே போல் லக்ஷணத்தை நன்கு அறிந்த மேதைகள் ஸங்கீதத்தின் லக்ஷணக்ரமத்தை கிரந்தங்கள் ரூபமாக நமக்கு அளித்துள்ளார்கள். ஒவ்வொரு கால கட்டிடத்திலும் எப்படி இசை பரிணாம வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள இவர்களின் கிரந்தங்கள்தான் ஆதாரமாக இருக்கின்றன.

இந்த மரபில் வந்த லக்ஷணக்காரர்களில் ஸாரங்கதேவரும் ஒருவர். அவர் ஸங்கீதரத்னாகரம் என்ற பெரிய கிரந்தத்தை அளித்துள்ளார்கள். இக்கிரந்தம் 13வது நூற்றாண்டில் எழுதப்பட்டதாகத் தெரிய வருகிறது. இதன் க்ரந்த கர்த்தா, தான் அரசாங்கத்தில் Accountant General ஆக வேலை பார்த்து வந்ததாகவும் மேலும் தன் பூர்வோத்தரங்களையும் குறிப்பிடுகிறார். இவருக்குமுன் பரதர், மதங்கர் போன்றவர்கள் எழுதிய கிரந்தங்களுக்கும், பின் வந்த ஸ்வரமேளகலாநிதி, சதுர்தண்டிப்ரகாசிகை போன்ற கிரந்தங்களுக்கும் இது ஒரு பாலமாக இருந்திருக்கிறது. ஸாரங்கதேவர் பழைய மரபுகளை தழுவியே இயற்றியுள்ளார்.

தென்னாட்டில் நாதஸ்வரம், தேவாரம் இவைகளால் ஸங்கீதம் நன்கு பிரஸித்தமாக இருந்த காலத்தில் இவர் கிரந்தத்தை எழுதியுள்ளார் என்று தெரிகிறது.

இக்கிரந்தத்திற்கு அனேக வ்யாக்யானங்கள் பின்னால் எழுதப்பட்டிருக்கிறது. ஸிம்ஹபூபாலர் இயற்றிய ஸுதாகரவ்யாக்யாத்தையும், கல்லிநாதர் இயற்றிய கலாநிதி என்ற வ்யாக்யானத்தையும் தழுவி இக்கட்டுரை எழுதப்படுகிறது. 1932 - The Music Academy Journal ல் Late Dr.V. ராகவன் அவர்கள் மேற்கண்ட 2 வ்யாக்யானங்களைத்தவிர இன்னும் 2 வ்யாக்யானங்கள் இருப்பதாக கூறுகிறார். ஸங்கீதத்திற்கு ஸப்த ஸ்வரங்கள் ஆதாரம் என்பதால் அதே அபிப்ராயத்தில் ஸங்கீத ரத்னாகரத்தில் ஏழு அத்யாயங்களுடன் கிரந்தம் ஆரம்பிக்கப்படுகிறது என்று தோன்றுகிறது.

1) ஸ்வரகதாத்யாயம் 2) ராகவிவேகாத்யாயம் 3) ப்ரகீர்ணகாத்யாயம் 4) ப்ரபந்தாத்யாயம் 5) தாளாத்யாயம் 6) வாத்யாத்யாயம் 7) நர்தனாத்யாயம்.

மேற்கண்ட அத்யாயங்களிலிருந்து முதலாவதாக உள்ள ஸ்வர கதாத்யாயத்தைப் பற்றி மாத்திரம் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஸ்வரகதாத்யத்தில் 8 ப்ரகரணங்கள்

1. பதார்த்த ஸங்க்ரஹப்ரகரணம்
2. பிண்டோத்பத்தி ப்ரகரணம்.
3. நாத, ஸ்தான, ச்ருதி, ஸ்வர, ஜாதி, குல, தைவத, ரிஷி, சந்தஸ், ரஸப்ரகரணம்
4. க்ராம, மூர்ச்சனாக்ரம - தான ப்ரகரணம்
5. ஸாதாரணம் ப்ரகரணம்.
6. வர்ணா லங்காரப்ரகரணம்.
7. ஜாதிப்ரகரணம்.
8. கீதப்ரகரணம்.

மேற்கண்ட ப்ரகரணங்களிலிருந்து மூன்றாவதாக உள்ள நாத, ஸ்தான என்ற ப்ரகரணத்தில் நாத, ச்ருதி, ஸ்வர, ஸ்வர ஸ்தான என்ற தலைப்புகளை மாத்திரம் இப்பொழுது இக்கட்டுரைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஸ்வரகதாத்யாயம் என்றதற்கு இரண்டு விதமாக விக்ரஹவாக்யம் வ்யாக்யானகர்த்தாக்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்கள்.

स्वरगताध्यायइति = स्वरान् अनुगता: श्रुति,
ग्राम, मूर्च्छनालंकारजाति गीताध्याय: तेषा अध्याये॥

ஸ்வரங்களைளத் தொடர்ந்து ச்ருதி, க்ராம மூர்ச்சனாலங்கார, ஜாதி, கீதம் இவைகளைக் கொண்ட அத்யாயத்தில்

नियतश्रुति संस्थोऽतो गीयते सप्त गीतिषु
तस्मात् स्वरगता ज्ञेयाश्रुतय: श्रुति वेदिभि:

நிர்ணயிக்கப்பட்ட ச்ருதிகளில் இருந்து ஏழு கீதிகளில் பாடப்படுவதால் சுருதிகள் ஸ்வரகதா, என்று ச்ருதி தெரிந்தவர்களால் தெரிந்து கொள்ளப்படுகிறது.

1. நாதம்

नादोपासनाया देवा: ब्रह्म विष्णु महेश्वरा:
भवन्त्युपासिता: नूनं यस्मादेते तदात्मका:।
न कारं प्राण नामनं दकारं अनलं विदु:
जात: प्रणाग्नि संयोगात्तेन नादोभिघोयते॥

நாதத்தை சரீரமாகக் கொண்ட ப்ருஹ்ம, விஷ்ணு, மஹேச்வரர்களை உபாஸிக்கிறேன். நாதத்தில் வரும் நகாரம் ப்ராணனையும், த காரம் அக்னியையும் இவைகளின் சேர்க்கையால் நாதம் உண்டாகிறது. ஸ்ரீதியாகராஜர், ஸ்ரீதீக்ஷிதர் போன்றவர்கள் நாதத்தின் மஹிமையை தங்கள் க்ருதிகளில் பல இடங்களில் சொல்லியிருக்கிறார்கள்.

ஸ்ரீதியாகராஜர் - நாதோபாஸன, நாதஸுதாரஸம்பிலனு, நாததநுமனிசம்

ஸ்ரீ தீக்ஷிதர் - பைரவி நவாவரண கீர்த்தனையில் நாதமய ஸூக்ஷ்ம ரூப, "மூலாதிநவாதார வ்யாவ்ருத்த தசத்வனிபேத யோகிப்ருந்த" போன்ற குறிப்புகளையும் வைகள், மந்த்ர த்ரஷ்டாக்கள் நாதவடிவமான மந்த்ரங்களையும், வேதங்களையும் க்ஷேமத்திற்காக அளித்துள்ளார்கள். ஸகுணரூபமாக பகவானை ஆராதிப்பதும், நாதவடிவனனாக பாடுவதும் ஸமம்தான் என்று ऐते तदात्मका: तस्मादभिन्ना: வ்யாக்யானகர்த்தாக்கள் சொல்லுகிறார்கள். இன்னும் இதற்கெல்லாம் மேலாக

नाहं वसामि वैकुण्ठे नायोगि हृदये रवौ।
मद्भक्ता: यत्र गायन्ति तत्र तिष्ठामि नारद ।।

*நான் வைகுண்டத்தில் இல்லை. யோகிகள் ஹ்ருதயத்தில் இல்லை. ஆனால் என் பக்தர்கள் எங்குபாடுகிறார்களோ அங்கு வசிக்கிறேன் என்று பகவான் சொல்லுகிறார். ஸுதாகர வ்யாக்யானத்தில், நாதத்தைப்பற்றி மதங்கர் கொடுத்திருக்கும் ச்லோகத்தைக் எடுத்துக் கூறுகிறார்.*

न नादेने विनागीतं न नादेन विनास्वरा:।
न नादेन विनानृत्तं तस्मान्नादात्मकं जगत्।।
नाद रूप: स्मृतो ब्रह्मा नाद रूपो जनार्दन:
नाद रूप:पराशक्ति नाद रूपो महेश्वर:।।

*நாதம் இல்லாமல் கீதம், ஸ்வரம், ந்ருத்தம் இவைகள் இல்லை. ஆதலால் ஜகத்தானது நாதாத்மகம். ப்ருஹ்மா, விஷ்ணு, பராசக்தி, மஹேச்வரன் இவர்கள் நாதரூபமாக கருதப்படுகிறார்கள்.*

*ச்ருதி :- ச்ருதி என்ற வார்த்தைக்கு அனேக அர்த்தங்கள் உண்டு. ஸங்கீத சாஸ்த்ரத்தை அனுசரித்து, ஸுதாகரவ்யாக்யானத்தில் விச்வாஸவாக்யத்தை கீழ்க்கண்டவிதமாக ச்ருதி என்றால் என்ன என்று சொல்லுகிறார்.*

श्रवणोन्द्रिय ग्राह्यत्वाद्ध्वनिरेवश्रुतिभर्वेत् : *ச்ரவணேந்த்ரியம் கிரஹிக்கும் த்வனியே ச்ருதி என்று ஆகும்.*

तस्यद्वाविशतिर्भेदा: श्रवणाच्छुतयो मता:।। *(ரத்னாகரம்)*

*காதில் கேட்கும் தன்மையுடைய ச்ருதிகள் 22. ஸுதாகர வ்யாக்யானத்தில், 3 ஸ்தாயில் 66 ச்ருதி என்றும், சுருதி அனந்த்யம் என்று கூறிய போதிலும், 22 தான* (समीचीन इतिमत्वा) *யதார்த்தம் என்கிற ஸாரங்க தேவரின் அபிப்ராயத்தை வ்யாக்யானகர்த்தா ஊர்ஜிதம் செய்கிறார். ஸாரங்க தேவரும் 22 சுருதி பக்ஷத்தை நிரூபிக்க*

व्यक्तये कुर्महे तासां वीणा द्वंद्वे निदर्शनम् *(ரத்னாகரம்)*

*2 வீணைகளைக் கொண்டு 22 சுருதிகளை தெளிவுபடுத்திக் காண்பிக்கிறேன் என்கிறார்.*

द्वेवीणे सदृशौ कार्ये यथानाद: समोभवेत्
तयोर्द्वाविंशतिस्तन्त्रय: प्रत्येकं तासु चादिमा।। *(ரத்னாகரம்)*

இரண்டு வீணைகளில் ஒவ்வொன்றிலும் 22 தந்திகளை அமைத்து ஒவ்வொரு தந்தியையும் கொஞ்சம், கொஞ்சமாக சுருதிகளை ஏற்றி 2 வீணைகளும் ஸமநாதத்துடன் அமைத்துக்கொள்ளவும் - ஒரு வீணை, த்ருவ வீணை என்று அதாவது மற்றொரு வீணையின் நிரூபணத்திற்கு ஏதுவாக தந்திகள் அசலமாக அதாவது மாறுதல் செய்யாததாகவும், மற்றொன்று சலவீணை என்று, தந்திகளை ஏற்றி இருக்கும் வீணையாகவும் அமைத்துக் கொள்ளப்படும். ஸாமஸப்தகத்தின் ஸ்வரஸ்தானங்களை (சுத்த ஸ்வர ஸப்தகத்தை) கீழ்க்கண்டவாறு இரண்டு வீணைகளிலும் அமைத்துக் கொள்ளப்படுகிறது.

4 சுருதியைக்கொண்ட ஷட்ஜம் 4வது தந்தியிலும்

3 சுருதியைக்கொண்ட ரிஷபம் 7வது தந்தியிலும்

2 சுருதியைக்கொண்ட காந்தாரம் 9வது தந்தியிலும்

4 சுருதியைக்கொண்ட மத்யமம் 13வது தந்தியிலும்

4 சுருதியைக்கொண்ட பஞ்சமம் 17வது தந்தியிலும்

3 சுருதியைக்கொண்ட தைவதம் 20வது தந்தியிலும்

2 சுருதியைக்கொண்ட நிஷாதம் 22வது தந்தியிலும்

பிறகு ஸாரணசதுஷ்டயம் என்ற சோதனைமுறையைச் செய்யப்படுகிறது.

1. முதல் ஸாரணம்

ध्रुववीणा स्वरेभ्योस्यां चलायां ते स्वरास्तदा
एकश्रुत्यपकृष्टा: स्युरेवमन्याऽपि सारणा।।

முதல் சோதனையில் அதாவது த்ருவவீணையோடு ஸமமாக இருக்கும் சலவீணையில் உள்ள ஸ்வரங்களை ஒரு சுருதி குறைக்கவும்

अस्यां चलवीणायां षड्जादय: स्वरा:
घ्रुववीणास्वरेभ्य: एकश्रुत्यकृष्टा: स्यु:। (ஸுதாகரம்)

ஒரு சுருதியிறக்கிய பிறகு ஒரு சுருதி குறைந்த வித்யாஸத்துடன் த்ருவ வீணையின் ஸ்வர ஸ்தானத்துடன் ஸமமாக இருக்கும் - மாறுதல் இல்லை.

2வது ஸாரணம்

श्रुतिद्वयलयादस्यां चलवीणा गतौ गनी।
ध्रुववीणोपगतयो रिधयोर्विशत: क्रमात्। (ரத்னாகரம்)

இரண்டாவது சோதனையில் அதாவது மேலும் ஒரு சுருதியை குறைக்க சலவீணையின் காந்தார, நிஷாதம், த்ருவ வீணையின் ரிஷபம் தைவத்தில் லயமாகிறது. அதாவது ध्वनिसाम्यादेकाकारतां भजत (கலாநிதி) த்விச்சுருதி இறங்கிய சலவீணையின் ஏழாவது சுருதியில் உள்ள காந்தாரம், த்ருவ வீணையின் ஏழாவது சுருதியில் இருக்கும். ரிஷபத்திலும், இருபதாவது சுருதியில் உள்ள நிஷாதம் த்ருவ வீணையின் இருபதாவது சுருதியால் இருக்கும் தைவதத்திலும் லயமாகி இரண்டு, இரண்டு சுருதிகளை இழந்து சதுச்ருதி லாபமாகிறது.

द्वितीय सारणायांश्रुति चतुषृयलाभ: (ஸு॰தாகரம்)

3வது ஸாரணம்

तृतीयस्यां सारणायां विशत: सपयोरिधौ। (ரத்னாகரம்)

மூன்றாவது சோதனையில் அதாவது இன்னும் ஒரு சுருதி குறைக்க திச்ருதி குறைத்தவுடன் (ஸு॰)

ऋषभ: षड्जं प्रविशति, धैवत: पञ्चमं प्रविशति।

சலவீணையின் நான்காவது சுருதியையடைந்த ரிஷபம், த்ருவவீணையின் நான்காவது சுருதியையுடைய ஷட்ஜத்திலும், சலவீணையின் பதினேழாவது சுருதியையுடைய தைவதம், த்ருவவீணையின் பதினேழாவது சுருதியையுடைய பஞ்சமத்தில் மூன்று மூன்று சுருதிகளை இழந்து லயமாகிறது. அதனால் (ஸு॰) तृतीयायां षड्श्रुति लाभ: 3வது ஸாரணத்தில் 6 ச்ருதி லாபம்.

4வது ஸாரணம்

निगमेषु चतुर्थ्यातुं विशन्ति समपा: क्रमात्॥ (ரத்னாகரம்)

நான்காவது சோதனையில் அதாவது இன்னும் ஒரு சுருதி குறைக்க, அதாவது சதுச்ருதி குறைய சலவீணையின் 18வது சுருதியில் உள்ள ஷட்ஜம், ஒன்பதாவது சுருதியில் உள்ள மத்யமம், பதிமூன்றாவது சுருதியில் உள்ள பஞ்சமம், த்ருவ வீணையின் மந்த்ர நிஷாதத்திலும், காந்தாரத்திலும், மத்யமத்திலும், நான்கு, நான்கு, நான்கு சுருதிகளை இழந்து அதாவது த்வாதச சுருதிகளை இழந்து லயமாகிறது. ஸமான நாதமாகிறது.

| | |
|---|---|
| முதல் ஸாரணத்தில் | மாறுதல் இல்லை. |
| 2வது ஸாரணத்தில் | 4 ச்ருதி லாபம் |
| 3வது ஸாரணத்தில் | 6 ச்ருதி லாபம் |
| 4வது ஸாரணத்தில் | 12 ச்ருதி லாபம் |
| மொத்தம் | 22 ச்ருதி லாபம் |

श्रात: द्वार्विंशंतावेवं सारणानां चतुषृयात्।
ध्रवाश्रुतिषु लीनायामियत्ता ज्ञायते स्बुटम्।।
एवं सारणचुतषृयाच्छुतिद्वाविंशतौ ध्रुवाश्रुति
लीनायां सत्यां द्वविंशतिरेवश्रुतय इतीयत्तैतावत्सं रव्याकत्वं ज्ञायते

*(ரத்னாகரம்)*

*ஆக மேற்கண்ட ஸாரண சதுஷ்டயத்தால் சலவீணையின் ஸ்வரங்கள் த்ருவவீணையின் சுருதிகளில் லீனமாகி சுருதிகள் 22தான் என்று அறியப்படுகிறது. ஏன் மேலும் சுருதியை குறைத்து சோதனை செய்யக்கூடாது என்று கேள்வியை அவரே கேட்டு அதற்கு பதிலும் அவரே சொல்லுகிறார்.*

अत: परंतुरत्किघ्नं कियमपकर्षणम् *(ரத்னாகரம்)*

अत: परंतुरत्किघ्नं कियमपकर्षणम्
अत: परं अपकर्षणेकृते स्वराणां रञ्जकत्वाभावात्
स्वरत्वमेव नश्यति स्वतो रञ्चयति श्रोतृ चितं स
स्वर उच्यते इति वृक्ष्य माणत्वात्। *(ஸுதாகரம்)*

*இதற்குப் பிறகு ஒரு சுருதியை குறைத்து இன்னும் சோதனை செய்தால் ஸ்வரங்களுக்கு ரஞ்சகத்தன்மையில்லாமல் போய்விடுகிறது. எது கேட்பவர்களின் சித்தத்திற்கு இன்பம் அளிக்குமோ அது ஸ்வரம் என்ற விக்ரஹ வாக்யம் சொல்லப்படுவதால்*

ஸ்வரம்

श्रुत्यनन्तर भावीय: स्निग्धोऽनुरणनात्मक:।
स्वतो रञ्चयति श्रोतृचित्तं स स्वर उच्यते।।

*ச்ருதிக்குப் பிறகு ம்ருதுவாகவும், இனிமையான த்வனியாகவும் வருவது ஸ்வரம் எனப்படுகிறது. கேட்பவர்களின் ஹ்ருதயத்தை எது ரஞ்ஜிக்கச் செய்கிறதோ அது ஸ்வரம். (ஸு) (22தந்திகளில்) முதல் தந்தியை மீட்டும் போது காதுக்கு இனிமை இல்லாத த்வனி ச்ருதி என்றும், பிறகு வரும் தந்தியில் மீட்டும் போது காதுக்கு எது இனிமை உண்டு பண்ணுகிறதோ அது ஸ்வரம் எனப்படுகிறது. பால் எப்படி தயிராக மாறுகிறதோ அதே போல் சுருதி ஸ்வரமாகிறது என்கிற பக்ஷத்தை மதங்கர் ஏற்றுக்கொள்கிறார். பொதுவாக சுருதி கார்யமென்றும், ஸ்வரம் காரணம்*

*என்றும் எப்படி மண் குடமாக பரிணமிக்கிறதோ அதே போல் சுருதி ஸ்வரமாகிறது என்று கூறப்படுகிறது.*

श्रुतिभ्य: स्यु: स्वरा:
ननु श्रुतिश्चतुर्थ्यदि त्तस्त्वेवं स्वरकारणम्।
त्र्यादीनां तत्र पूर्वासां श्रुतीनां हेतुता कथम्।
ब्रूमस्तुतितयिदि: श्रुति: पूर्वाभिकाङ्भ्या।
निर्धा र्यतेऽत: श्रुतय: पूर्वाअप्यत्र हेतव:।। *(ரத்னாகரம்)*

*ஸ்வரத்தைக் குறிக்கும்போது இது நான்காவது, மூன்றாவது சுருதி என்று குறிக்கப்படுவதாலும், ஸ்வரத்திற்கு முன்னால் சுருதிகள் இல்லாமல் இருந்தால் மேற்கண்ட நான்காவது, மூன்றாவது சுருதிகளை எப்படி விவரிக்க முடியும். அதனால் ச்ருதிகள் தான் ஸ்வரங்களுக்கு ஏதுவாகிறது.*

12 விக்ருத ஸ்வரங்கள் :-

ते मन्द्र ताराख्य स्थान मेदात्त्रिधा मता:।
त एव विकृतावस्था द्धश प्रतिपादिता:।
च्युतोच्च्युतो द्विद्धा षडजे। द्विश्रुति र्विकृतोभवेत्
सा घारणे काकलीत्वे निषादस्यं चं दृश्यते
साधारणे श्रुतिं षाङ्जीमृषभ-सांश्रितो यदा।
चतु: श्रुतित्वमायाति तदेको विकृतो भवेत्
सा धारणे त्रिश्रुति: स्यादन्तरत्वे चतु: श्रुति:
गान्धार इति तद्भेदो द्वौ निश्शङ्केन कीर्तितौ।
मध्यम: षड्जवद्द्वेधऽन्तर साधारणाश्रयात्
पञ्चमो मध्यमग्रामे त्रिश्रुति: कैशिके पुन:
मध्यमस्य श्रुति प्राप्यचतु: श्रुति धति द्विरि
धैवतो मध्यमग्रामे विकृते स्याच्चातु: श्रुति:
प्राप्नोति विकृतो भेर्दो द्वाविति दृदशस्मृता:
ते शुद्धे सप्रमि: सार्धभवन्त्येकोनविशति:।। *(ரத்னாகரம்)*

*சுத்த ஸப்த ஸ்வரங்களையும், அதற்குள்ள ச்ருதியின் அளவையும் சொன்னபிறகு இதற்கு அன்யதாவாக வரும் ஸ்வரங்களையும், அதற்குள்ள ச்ருதிகளையும் சொல்லி அவைகளை விக்ருத ஸ்வரங்கள் என்று சொல்லுகிறார். அந்த விக்ருத ஸ்வரங்களை நிரூபிக்க 22 சுருதிகளில், சுத்த ஸ்வரங்களை ஆதாரமாகக் கொண்டு ஸாதாரணம் என்ற முறையைக் கையாண்டுள்ளார்.*

साधारणम् अन्तरस्वरतां। द्वयोरन्तरेयद्भवति
तत्साधारणम्। यथा ऋत्वन्तरे। छायासुभवतिशीतं
प्रस्वेदोभवति चातपस्य। नागतो वसन्त:
नचनि:शेष: शिशिरकाल:।। *(பரத நாட்ய சாஸ்த்ரம்)*

*ஸாதாரணம் என்பது இரண்டுக்கு மத்யத்தில் வரும் ஸ்வரம். இரண்டுக்கு நடுவில் வருவது எதுவோ அது ஸாதாரணம். எப்படி சிசிர ருது முடிந்து வஸந்த ருது ஆரம்பத்தில், மாசி, பங்குனி கடைசியில் சித்திரை, வைகாசி ஆரம்பத்தில் நிழலில் இருக்கும்போது குளிர்ச்சியாகவும், வெய்யிலில் வேர்வையும் ஏற்பட்டு இந்த இடைக்காலம் வஸந்தம் வரவில்லை. சிசிர ருது முடியவில்லை, ஆனால் இந்தக் காலம் வஸந்தம், சிசிரம் இரண்டுக்கும் பொருத்தமாக இருக்கும்.*

साधारणं भवेद्द्वेधा स्वर जाति विशेषणात्
काकल्यन्त षडजैश्च मध्यमेन विशेषणात्
साधारण काकलीहि भवेत्षङज निषादयो:
अन्तरस्यापि गमयोरेवं साधारणं मतम्।। *(ரத்னாகரம்)*

साधारणइति काकलीस्वर: षड्जनिषादयो:
साधारण: तुल्यावस्थितिर्भवति निषादस्य
षड्जस्य च श्रुति दूयग्रहणात्।

*ஸ்வர ஸாதாரணம் ஷட்ஜத்தினுடையதும், நிஷாதத்தினுடையதும் இரண்டு ச்ருதிகளை கிரகித்து காகலியாகவும்*

गान्धारस्य मध्यमस्य चश्रुतिदूय ग्रहणात्
अन्तरस्वरोहि गान्णधार मध्यमयो: साधारण: *(ஸு௺தாகரம்)*

*காந்தார, மத்யமத்தின் இரண்டு சுருதிகளை கிரஹித்து அந்தர காந்தாரமாகிறது.*

ஸாதாரணம் என்பதை சுத்த ஸ்வர ஸப்தகத்தைக் கொண்டு கீழ்க்கண்டவாறு சொல்லலாம். உதாரணமாக

சுத்த ஸ்வர ஸப்தகம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 9 | 13 | 17 | 20 | 22 |
| ஸ | ரி | க | ம | ப | த | நி |
| 4 | 3 | 2 | 4 | 4 | 3 | 2 |

மேற்கண்ட சுத்த ஸ்வர ஸப்தகத்தின் ஒன்பதாவது சுருதிக்கும் பிறகு வரும் பத்தாவது சுருதியை காந்தாரத்தைச் சேர்ந்ததாகவும், மத்யமத்தை சேர்ந்ததாகவும் சொல்லலாம். 22 சுருதிகளை ஆதாரமாகக் கொண்டு ச்ருதிகளிலிருந்துதான் ஸ்வரங்கள் என்ற முறைப்படி ஏழு ஸ்வரங்களுக்கும் விக்ருதத்வம் கூறப்படுகிறது. இப்பொழுது ரத்னாகர ச்லோகங்களில் விக்ருதத்வம் சொல்லப்படுகிறது என்பதை

तेमन्द्रताराख्य मந்த்ர, மத்ய, தார ஸ்தான விக்ருத ஸ்வரம் என்று சொல்லப்படுகிறது. ரி ஸ்தானத்திற்குப் பிறகு 12 என்று ப்ரதிபாதிக்கப்படுகிறது.

च्यतोऽच्युतो ச்யுதம், அச்யுதம் என்று ஷட்ஜத்திற்கு இரண்டு விக்ருதத்வம்.

ஷட்ஜ ஸாதாரணம்

निषादो यदिषड्जस्य श्रुतिमादयां समाश्रयेत्
ऋषभस्वान्तिमां प्रोत्क षड्ज साधारण तदा

நான்கு சுருதியுடைய ஷட்ஜத்தின் முதல் சுருதியை நிஷாதமும், ரிஷபம் கடைசி சுருதியை அதாவது நான்காவது சுருதியை ஆச்ரயிக்கும்போது அது ஷட்ஜ ஸாதாரணம் எனப்படுகிறது. ச்யுதஷட்ஜம் என்பது தன் நான்காவது சுருதியிலிருந்து மூன்றாவது சுருதிக்கு வருவது என்பது ஒரு விக்ருதம். அச்யுதமாகும் போது அதே சுருதியில் இருந்த போதிலும், நிஷாதமானது ஷட்ஜத்தின் இரண்டு சுருதிகளை கிரஹித்து காகலித்தன்மை அதாவது पूर्वश्रुति हनित्वात ஷட்ஜத்திற்கு என்று ஏற்பட்ட நான்கு சுருதிகளை இழந்து ஷட்ஜத்திற்கு இரண்டு சுருதிகள் மாத்திரம் இருப்பதால் ஷட்ஜத்திற்கு ஒரு விக்ருதம். ஷட்ஜ ஸாதாரணத்தில் ஷட்ஜத்தின் கடைசி சுருதியை ரிஷபம் கிரஹித்து 4,5,6,7 சுருதிகளை கிரஹித்து சதுச்ருதியாகி ரிஷபம் விக்ருதம்.

मध्यम: षड्ज्वद् மத்யமத்திற்கு இரண்டு விதமான விக்ருதத்வம். அதாவது மத்யம். 13வது சுருதியிலிருந்து 12வது சுருதிக்கு ச்யுதமாகி மத்யமத்தின் முதல் சுருதியை கிரஹித்து மத்யம் திருச்ருதியாகி ஒரு விக்ருதம் மத்யமம் அச்யுதத் தன்மையில், முதல் இரண்டு சுருதிகளை 10, 11 சுருதிகளை காந்தாரம் கிரஹித்து விக்ருதமாகிறது. ஷட்ஜத்திற்கு நிஷாதத்தின் காகலித்தன்மையால் எப்படி இரண்டு விக்ருதம் ஏற்பட்டதோ அதே மாதிரி மத்யமம் தன் ஸ்தானத்திலிருந்து ச்யுதமாகும் போது ஒரு விக்ருதம், அச்யுதமாகியிருக்கும் போது மத்யம்தத்தின் இரண்டு

ச்ருதிகளை காந்தாரம் எடுத்துக் கொண்டதால் மத்யம் தன் இரண்டு சுருதிகளை எழுந்து விக்ருதம் :

பஞ்சமத்திற்கு இரண்டு விதமான விக்ருதம், பஞ்சமம், 17வது சுருதியிலிருந்து 16வது சுருதிக்கு வரும் ஒரு விக்ருதம். திருதீய ச்ருதியில் இருப்பதால். இது மத்யம க்ராமம் என்று சொல்லப்படுகிறது. மத்யம ஸாதாரணத்தில் மத்யமத்தின் கடைசி சுருதியை பஞ்சமம் ஆக ரஹித்து அதாவது 13வது சுருதியை கிரஹித்து சதுச்ருதியாகி ஒரு விக்ருதமாகிறது.

தைவதத்திற்கு ஒரே விதமான விக்ருதத்வம். மத்யம க்ராமத்தில் பஞ்சமம் திருதீய ச்ருதியில் இருக்கும்போது, பஞ்சமத்தின் சுருதி அதாவது 17வது சுருதி தைவதத்தை அடைகிறது. அப்பொழுது தைவதம் சதுச்ருதியாகி விக்ருதத்வம் அடைகிறது.

நிஷாதத்திற்கு இரண்டு விதமான விக்ருதத்வம்

ஷட்ஜ ஸாதாரணத்தில் நிஷாதம் முதல் சுருதியை கிரஹித்து அதாவது ஒன்றாவது சுருதியை கிரஹித்து நிஷாதத்திற்கு ஒரு விக்ருதம், காகலியாகி ஷட்ஜத்தின் இரண்டு சுருதிகளை கிரஹித்து ஒரு விக்ருதம். இவ்விதம் 12 விக்ருத ஸ்வரங்கள் ஆகிறது. ஆக சுத்த ஸ்வர ஸப்தகத்தில் 7ம், மேற்கண்ட முறையில் ஏற்பட்ட 12 விக்ருதங்களுக்கும் சேர்ந்து एकोनविंशतिभेदा : 19 விதமான பேதங்கள் ஏற்படுகிறது என்று ஸார்ங்க தேவர் சொல்லுகிறார். இப்பொழுது ஏற்பட்டுள்ள பன்னிரெண்டு ஸ்வர ஸ்தானங்களுக்கு இது முன்னோடியாக இருந்திருக்கலாம்.

| சுத்த ஸ்வர ஸப்தகத்தின் ஸ்வரங்கள் | ஸாரங்க தேவர் கொடுத்துள்ள 12 விக்ருத ஸ்வரங்கள் |
|---|---|
| 1. சதுச்ருதி ரிஷபம் | 1. கைசிகி நிஷாதம் |
| 2. திச்ருதி ரிஷபம் | 2. காகலி நிஷாதம் |
| 3. திவிச்ருதி காந்தாரம் | 3. ச்யுத ஷட்ஜம் |
| 4. சதுச்ருதி மத்யமம் | 4. அச்யுத ஷட்ஜம் |
| 5. சதுச்ருதி பஞ்சமம் | 5. விக்ருத ரிஷபம் |
| 6. திச்ருதி தைவதம் | 6. ஸாதாரண காந்தாரம் |
| 7. திவிச்ருதி நிஷாதம் | 7. அந்தர காந்தாரம் |
| | 8. ச்யுத மத்யமம் |
| | 9. அச்யுத மத்யமம் |
| | 10. திருச்ருதி பஞ்சமம் |
| | 11. கைசிக பஞ்சமம் |
| | 12. விக்ருத தைவதம் |

*Prof. B. Krishnamoorthi is a Performing artiste. He retired as Principal, Tamilnadu Government Music College, Madurai.*

# DETERMINATION OF THE RELATIVE FREQUENCIES AND FUNDAMENTAL PROPERTIES OF SWARAS USING MODAL SHIFT TONIC

*Dr. K. Varadarangan*

This paper describes a systematic approach for the determination of the relative frequencies or frequency numbers (called sruthi sankhyas) of the twelve swaras using the well-known sutras of modal shift of tonic (grahabheda) found in musical literature. The frequency numbers given in many books are often confusing and the same swara is sometimes given different numbers. The approach herein is to use the well-known sutras of grahabeda to determine the unique frequency numbers of the twelve swaras. The sutras are used to set up simple algebric expressions from which the relative frequencies are then obtained. Having determined the twelve frequency numbers, the properties of these frequencies are then explored. Two interesting observations may be made 1) The reciprocals of the twelve frequency numbers form a sequence similar to the sequence formed by the number of days of the twelve months of an year. 2) There are two basic frequencies from which all the twelve frequencies of our music may be built. This property reminds us of the dual nature of the universe such as matter energy, *prakruthi purusha* etc.,

**Introduction** : Indian music employs the melodic scale where the swaras are expressed as fractional numbers. The base frequency or adhara shadja is not a fixed frequency, but each note in the scale bears a definite ratio to the base frequency. These frequency ratios are known as *sruthi sankhyas.* (or frequency numbers). There are seven names for the swaras and all notes except shadja and panchama have essentially two variants. In the north Indian system (also called Hindustani Music) the lower note is known as a *komal swara* and the upper note is called a *suddha* (or tivra in case of madhyama) swara. In Karnatic music each note has a distinctive name. The twelve swaras and their names are as follows :

| | Swara | Designation |
|---|---|---|
| 1. | Shadja | S |
| 2. | Suddha Rishabha | R1 |

| | | |
|---|---|---|
| 3. | Chathushruthi Rishabha / Suddha Gandhara | R2/G1 |
| 4. | Sadharana Gandhara / Shatshruthi Rishabha | G2/R3 |
| 5. | Antara Gandhara | G3 |
| 6. | Suddha Madhyama | M1 |
| 7. | Prati Madhyama | M2 |
| 8. | Panchama | P |
| 9. | Suddha Daivata | D1 |
| 10. | Chatushruthi Daivatha/Suddha Nishadha | D2/N1 |
| 11. | Kaishiki Nishada/ Shatsruthi Daivatha | N2/D3 |
| 12. | Kakali Nishadha | N3 |

From the above, we see that the twelve swaras are S, R1, R2, G2, G3, M1, M2, P, D1, D2, N2 and N3. The four swaras R3, G1, D3 and N1 are not new swaras and are already included in the above list. These four swaras have displaced note positons and hence are known as Vivadi swaras.

The objective of this paper is to derive the relative frequencies of the above tweleve swaras using the grahabheda technique and examine their properties. This approach yields simple algebric expressions which are then solved to extract the frequency numbers.

Notes : (1) The swaras referred to in this article are ideal frequencies which are also known as *sruthi sthanas*. The actual swaras used in a raga may be somewhat different from these and may also have the characteristic gamakas associated with them. 2) The swaras of the tarasthayi being two times the frequencies of the corresponding swaras of the madhyasthayi are designated 2S, 2R1, 2R2, 2G2 ..... etc., 3) For convenience, no separate symbol is used here to distinguish the frequency of a swara from the symbol of the swara itself. For example, M1 represents both shuddha madhyma and its frequency.

**Determination of the Relative Frequencies :** The first prakruthi swara that is the adhara shadja, by definition, has the frequency number equal to 1. The second prakruthi swara, namely panchama has the frequency number of 3/2 as this swara is exactly mid way on a linear scale between the adhara shadja (frequency no = 1) and the tara sthayi shadja (frequency number = 2). The frequency number of suddha madhyama can be determined as follows :

It is a common experience that when a tamboora is set to madhyama sruthi, the first string of the tamboora, that is panchama is tuned down to

suddha madhyama. This results in the original shadja now taking the position of a (new) Panchama. Thus :

M1 = 2 / (3/2) = 4 / 3.

We now use a well known grahabheda sutra which is in the form a sloka.

Mohana Madhyama Hindola Suddh - odaya Ravichandrike.

The above sutra may be explained as follows :

If we start with the raga Mohana and perform grahabeda with its Rishabha (R2) treated as the shadja, we get Madhyamavati (called Madhyama in the above sloka)

Similarly if do grahabheda with gandhara (G3) we get Hindolam.

Starting with panchama we get Suddha Saveri (called as Suddha in the above sloka). Similarly starting with dhaivatha (D2) we get Udaya Ravichandrike (also known as Suddha Dhanyasi).

The above sutra can now be put as follows :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Mohana | S | R2 | G3 | P | D2 | 2S |
| Madhyamavati (obtained by dividing by R2) | | S | R2 | M1 | P | N2 |

This gives the following equations :

R2 = G3 / R2 ..........................> 1

M1 = P / R2 ..........................> 2

P = D2 / R2 ..........................> 3

N2 = 2S / R2 ..........................> 4

Equation (2) above immediately gives us the result :

R2 = P/M1 = (3/2) / (4/3) = 9/8

Therefore, **R2 = 9/8**

Likewise from (1) we get G3 = R2 x R2 = (9x8) x (9/8) = 81/64

Therefore, **G3 = 81/64**

From (3) we get D2 = P x R2 = (3x2) x (9x8) = 27/16

Thus **D2 = 27/16**

From (4) we obtain N2 = 2S / R2 = 2 / (9/8) = 16/9.

Therefore **N2 = 16/9**

Thus we have determined the frequency numbers of R2, G3, D2 and N2. We still need the frequency numbers of R1, G2, M2, D1 and N3.

Continuing with the grahabheda sequence, we get Hindolam from Mohana by dividing the frequency number of Mohanan from G3 = 81/64. The set of equations is :

G2 = P/G3; this gives **G2 = 32/27**

M1 = D2 / G3; confirms that M1 = 4/3 but does not give any additional note frequency.

D1 = 2S / G3; this gives **D1 = 128 / 81**

N2 = 2R2 / G3; This confirms N2 = 16/9 but does not give any new note.

We have now determined all except R1, M2 and N3. The next two grahabheda sequences give Suddha Saveri and Udaya Ravichandrike but since these ragas do not contain R1 M2 or N3, they will not be of use in determining these three swaras.

We may now use another grahabheda sutra to determine R1, M2 and N3. This sloka involves the melakartha ragas (in fact, the first sutra involving Mohana etc., is a subset of this one) and reads:

**Nata Soonya Dheera Khara Hanuma Mecha Hari**

The ragas referred to in the above list are NataBhairavi (Nata), Shankarabharanam (Dheera Shankarabharanam), Kharaharaapriya (Khara), Todi (Hanuma Todi), Kalyani (Mecha Kalyani) and Harikambhoji (Hari). The word Soonya referred to above implies that no raga originates from Natabhairavi when rishabha is made as the tonic. Likewise, we get Sankarabharanam from gandhara, Kharaharapriya from madhyama and so on.

Out of the six ragas that appear in the above list we shall consider only Todi (this contains R1) and Kalyani (which contains M2 and N3). We consider Todi first :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Nata Bhairavi : | S | R2 | G2 | M1 | P | D1 | N2 | 2S | 2R2 | 2G2 | 2M1 |
| Todi (obtained after division by P) | | | | | S | R1 | G2 | M1 | P | D1 | N2 |

From the above, we get

R1 = D1 /P = (128/81) / (3/2) = 256 / 243

Therefore R1 = 256 / 243

## TABLE I

| Modal shift by | Result of shift | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S (no shift) | Freqs. | 1 | 9/8 | 32/27 | 4/3 | 3/2 | 128/81 | 16/9 | 2 | 18/8 | 64/27 | 8/3 | 3 | 256/81 | 32/9 |
| | Swaras | S | R2 | G2 | M1 | P | D1 | N2 | 2S | 2R2 | 2G2 | 2M1 | 2P | 2D1 | 2N2 |
| | Raga | **NataBhairavi** | | | | | | | | | | | | | |
| R2 (9/8) | New freqs. | - | 1 | 256/243 | 32/27 | 4/3 | 1024/729 | 128/81 | 16/9 | 2 | | | | | |
| | Swaras | - | S | R1 | G2 | M1 | --------- | D1 | N2 | 2S | | | | | |
| | New Raga | **No meaningful raga results, as there is a problem with Panchama** | | | | | | | | | | | | | |
| G2 (32/27) | New Freqs. | - | - | 1 | 9/8 | 81/64 | 4/3 | 3/2 | 27/16 | 243/128 | 2 | | | | |
| | Swaras | - | - | S | R2 | G3 | M1 | P | D2 | N3 | 2S | | | | |
| | New Raga | **Dheera Shankarabharanam** | | | | | | | | | | | | | |
| M1 (4/3) | New Freqs. | - | - | - | 1 | 9/8 | 32/27 | 4/3 | 3/2 | 27/16 | 16/9 | 2 | | | |
| | Swaras | - | - | - | S | R2 | G2 | M1 | P | D2 | N2 | 2S | | | |
| | New Raga | **Kharaharapriya** | | | | | | | | | | | | | |
| P (3/2) | New Freqs | - | - | - | - | 1 | 256/243 | 32/27 | 4/3 | 3/2 | 128/81 | 16/9 | 2 | | |
| | Swaras | - | - | - | - | S | R1 | G2 | M1 | P | D1 | N2 | 2S | | |
| | New Raga | **Hanuma Thodi** | | | | | | | | | | | | | |
| D1 (128/81) | New Freqs. | - | - | - | - | - | 1 | 9/8 | 81/64 | 729/512 | 3/2 | 27/16 | 243/128 | 2 | |
| | Swaras | | | | | | S | R2 | G3 | M2 | P | D2 | N3 | 2S | |
| | New Raga | **Mecha Kalyani** | | | | | | | | | | | | | |
| N2 (16/9) | New Freqs. | - | - | - | - | - | - | 1 | 9/8 | 81/64 | 4/3 | 3/2 | 27/16 | 16/9 | 2 |
| | Swaras | | | - | - | - | - | S | R2 | G3 | M1 | P | D2 | N2 | 2S |
| | New Raga | **HariKambhoji** | | | | | | | | | | | | | |

We next consider Kalyani. This is obtained by shifting the swaras of Natabhairavi by D1, viz.,

Natabhairavi : S R2 G2 M1 P D1 N2 S 2R2 2G2 2M1 2P

Kalyani(obtained) S R2 G3 M2 P D2 N3
After dividing
by D1)

This gives **M2 = 2R2 / D1 = 2x (9/8) / 128/81) = 729 / 512**

and **N3 = 2P/D1 = 2x (3/2) / (128/81) = 243/128**

We have now determined the frequency numbers of all the twelve swaras. To ensure that all swaras have been determined correctly, we apply grahabeda for all the swaras of Natabhairavi and see what swaras and consequent ragas are obtained. The results are summarized in table I:

This table clearly indicates that all the swaras have been determined perfectly, since the sutra Nata Soonya Dheera Khara Hanuma Mecha Hari is perfectly satisfied. This fact is a clear pointer to the wisdom of our ancient musicologists.

The above method of determination of the frequency numbers is rational and is based purely on the grahabheda sutras. There does not appear to be such a systematic approach for the determination of the frequency numbers in the earlier work. For example (see table IV in page 32 and page 165) the frequency of prathi madhyama (729/512) does not figure in at all. Also different names are given to the same swara which is often confusing. Also the same swara is given different frequency numbers in different contexts. We now summarize the frequency numbers of the swaras in the following tables :

**TABLE II**

| Swara | Freq. No. | Value | Ratio of freq. no.of this swara and the previous one | Value of the freq. Ratio |
|---|---|---|---|---|
| S | 1 | 1.000000 | | |
| R1 | 256/243 | 1.053498 | 256/243 | 1.053498 |
| R2 | 9/8 | 1.125000 | 2187/2048 | 1.067871 |
| G2 | 32/27 | 1.185185 | 256/243 | 1.053498 |
| G3 | 81/64 | 1.265625 | 2187/2048 | 1.067871 |
| M1 | 4/3 | 1.333333 | 256/243 | 1.053498 |

| Swara | Freq. No. | Value | Ration of freq. no.of this swara and the previous one | Value of |
|---|---|---|---|---|
| M2 | 729/512 | 1.423828 | 2187/2048 | 1.067871 |
| P | 3/2 | 1.500000 | 256/243 | 1.053498 |
| D1 | 128/81 | 1.580247 | 246/243 | 1.053498 |
| D2 | 27/16 | 1.687500 | 2187/2048 | 1.067871 |
| N2 | 16/9 | 1.777778 | 256/243 | 1.053498 |
| N3 | 243/128 | 1.898438 | 2187/2048 | 1.067871 |
| 2S | 2 | 2.00000 | 256/243 | 1.053498 |

It may be noted that only powers of 2 and 3 are involved in the numerators and denominators of all the frequency numbers. Further, if the numerator of a swara is a power of 2 then its denominator is a power of 3 and vice-versa. Having determined the frequency numbers who now discuss the properties of these swaras.

**Fundamental Properties of the Swaras**

An examination of the above table reveals a remarkable property of the swaras of our harmonic scale that there are **two fundamental frequencies f1 and f2 from which all our swaras may be constructed.** The values of f1 and f2 are

**f1 = 256 / 243 = 1.0534979**

**f2 = (9/8) / f1 = 2187 / 2048 = 1.0678711**

The fact that there are two such frequencies indicates that the world of music is dual in nature. This duality is a manifestation of the Universe itself; we find that the basic entities of the Universe are dual in form. As example we may cite, matter - energy, particle-wave, *prakruthi -purusha* etc.

Another remarkable property is that if we take the reciprocal of the frequency ratios as shown in the fourth column of the above table, they form a sequence similar to the sequence formed by the number of days in the twelve months of a year. This property is summarized in the following table :

TABLE III

| Month | Jan | Feb | Mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct | Nov | Dec |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| No. of days | 31 high | 28 29 | 31 high | 30 low | 31 high | 30 low | 31 high | 31 high | 30 low | 31 high | 30 low | 31 high |
| Reci procal of ratios | A high | B low | A high | B low | A high | B low | A high | A high | B low | A high | B low | A high |

In the above

A = 243/256 = 0.9492187

B = 2048 / 2187 = 0.9364426

The geometric mean F of the two basic frequency ratios is

F = √(256 / 243) x (2187 / 2048)) = 1.0606602.

The frequency ratios Fw of successive notes in tempered scale of western music is

$F_w$ = 2½ = 1.0594631.

In relation to the equi-spaced notes of western music, the swaras of the melodic scale are arranged such that some notes are slightly below and some notes are slightly above these. This is illustrated in the table below:

TABLE IV

| Sl. No. | Notes of the temperated scale (Western) | Notes of the melodic scale (Indian) | Location of the melodic note with respect to the tempered note |
|---|---|---|---|
| 1. | 1.000000 | 1.000000 (S) | Same |
| 2. | 1.059463 | 1.053498 (R1) | Below |
| 3. | 1.122462 | 1.125000 (R2) | Above |
| 4. | . 1.189207 | 1.185185 (G2) | Below |
| 5. | 1.259921 | 1.265625 (G3) | Above |
| 6. | 1.334840 | 1.333333 (M1) | Below |
| 7. | 1.414214 | 1.423828 (M2) | Above |
| 8. | 1.494307 | 1.500000 (P) | Above |
| 9. | 1.587401 | 1.580247 (D1) | Below |
| 10. | 1.681793 | 1.687500m (D2) | Above |
| 11. | 1.781797 | 1.777778 (N2) | Below |
| 12. | 1.887749 | 1.898438 (N3) | Above |
| 13. | 2.000000 | 2.000000 (2S) | Same |

# MUSICAL REFERENCES IN SANGAM LITERATURE

*Dr. Prema Hariharan & Sulochana Pattabhiraman*

பன்னிரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே செழித்து வளர்ந்து, சீரிய நிலையில் விளங்கிய செந்தமிழ்மொழி, தன்னுடைய சிறப்பான வளத்தினால் பலவிதமான மேன்மைகளையும் பண்பாட்டு உயர்வையும் அடைந்திருந்தது. தமிழ்ப் பண்பாட்டுடன் பின்னிப் பிணைந்து தனித்தன்மையுடன் விளங்கிய இசைக்கலையின் தொன்மையை ஆராயும் பொழுது நமது வியப்பு எல்லையற்றதாகிறது. தமிழ் இலக்கியத்துடன் இசையும் கலந்தே வந்திருப்பது ஆராய்ச்சியில் தெளிவாகிறது.

அடிமுடி காண முடியாத இறைவனைப் போல அனாதியாக விளங்கும் இசைக்கலை, உலகம் பிறந்த அன்றே தானும் பிறந்து விட்டதோ என்று எண்ணும்படியான தொன்மையுடன் விளங்குகின்றது. அறிஞர் பலர் பல காலமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு இசைக்கலை வளர்ச்சியின் பல உண்மை நிலைகளைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இறைவனையே இசை வடிவமாகக் கண்ட பண்டைய தமிழ்மக்கள், இந்தத் தத்துவத்தின் உண்மை விளங்கும்படியாக, "ஏழிசையாய், இசைப்பயனாய்" என்றும் "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என்றும் இறைவனை வர்ணித்து மகிழ்ந்தனர். தென்னிந்திய இசை, ஏன் இந்திய இசையே பக்தியில் தோன்றி, பக்தியில் வளர்ந்துள்ள இசை என்பது தெளிவாகிறது. பக்தியும் இசையும் பிரிக்க இயலாத நிலையில் உள்ளது நம்முடைய இசையின் சிறப்பாகும்.

உலகம் போற்றும்படியான உன்னத நிலையில் விளங்கிக் கொண்டிருக்கும் நம்முடைய தென்னிந்திய இசையின், பழமையை ஆராயும் நோக்கத்துடன் நாம் ஒவ்வொரு நூற்றாண்டாகப் பின்னோக்கிப் பயணம் செய்தால் நாம் இறுதியாகச் சென்று நிற்கும் காலம் சங்க காலமாக இருக்கிறது. அதற்கும் முற்பட்ட காலத்தைப் பற்றிய தெளிவான குறிப்புகள் நமக்குக் கிடைக்காதது நமது துரதிர்ஷ்டம் எனத்தான் கூற வேண்டும்.

தென்னிந்திய இசையில் எத்துணை வகைகள்? எத்தனை ஆயிரம் பாடல்கள்? எத்தனை வாக்கேயகாரர்கள்? எத்தனை ராகங்கள்? எத்தனை தாளங்கள்? எத்தனை மேன்மையான நிலையில் இருந்திருக்கின்றது? இருந்து கொண்டும் இருக்கிறது நம்முடைய இசை?

இதைவிட மிகப்பெரிய வியப்பு என்னவெனில் முதற்சங்க காலம் எனப்படும் கிருஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலம், தெளிவாகச் சொன்னால், கி.மு. ஐந்தாவது

நூற்றாண்டிலேயே மிகவும் தென்னிந்திய இசை மிகவும் பண்பட்ட நிலையில், உன்னதமாக விளங்கி வந்திருக்கிறது. கி.மு. 4-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பரதரின் நாட்ய சாஸ்திரத்தில் தென்னிந்திய இசை பற்றி மிகவும் உயர்வாகக் கூறப்பட்டுள்ளது. பரதர் கூறுவதாவது, "விந்திய மலைக்கும் தென்கடலுக்கும் இடையில் உள்ள தென்னாட்டவர் பாட்டிலும், பல இசைக்கருவிகள் வாசிப்பதிலும், கூத்திலும் மிகத்திறமை வாய்ந்தவர்கள்". இது நாட்டிய சாஸ்திரம் 14வது அத்தியாயம் 37வது செய்யுள் விளக்கும் செய்தியாகும். இங்கு குறிப்பிடப்படுவது பண்டைய இசையே என்பதும், இந்தத் தொன்மையான இசை மரபுதான், இன்று நிலவி வரும் நமது சங்கீதத்துக்குத் தாயாகத் திகழ்ந்தது என்பதும் ஆய்வாளர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ள கருத்தாகும்.

கிருஸ்து பிறப்பதற்கு முன்பே உயர்வான, தெளிந்த நிலையில் இசை இருந்திருக்கிறது என்றால் அதற்கும் எத்தனை ஆயிரம் ஆண்டுகளாக அந்த மரபு பின்பற்றப்பட்டு சிறப்பாக விளங்கியிருக்க வேண்டும்? முரஞ்சியூர் முடிநாகராயர் தாம் இயற்றிய புறநானூற்றுப் பாடலில் பாரதப்போரில் இரு பக்கத்து சேனைகளுக்கும் உணவளித்து, பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்று பெயர் கொண்ட சேரமன்னனைப் பேசுகிறார்.

அறிஞர்களுடைய ஆராய்ச்சிக்கு எட்டிய வரை சங்க காலமே தமிழ் மொழியின் பழைமையான காலமாகக் கருதப்படுகிறது. இது முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் சங்கங்களாக இயங்கி வந்திருக்கின்றது. இந்த மூன்று சங்கங்களுக்கும் முன்பாகவே வேறு தொன்மையான மூன்று தமிழ்ச்சங்கங்கள் இருந்தன என்றும் அவை இயங்கி வந்த கபாடபுரம் கடல் கோளாறால் அழிந்து விட்டது என்றும் குறிப்புக்கள் கூறுகின்றன. கபாடபுரம் என்னும் பண்டைய பாண்டிய தலைநகரம் பற்றிய குறிப்பு வால்மீகி ராமாயணத்தில் உள்ளது என்பதை ஆராய்ந்தால் இந்த தமிழ்ச்சங்கங்களின் தொன்மை விளங்கும்.

சங்ககாலத்தைப்பற்றி கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், முதற்சங்கம், ஏறக்குறைய கி.மு. 500 முதல் கி.மு. 200 வரை நிலவியது என்றும், இடைச்சங்கம் கி.மு. 200 முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரையும், கடைச்சங்கம் கி.பி. 2வது நூற்றாண்டு வரையும் நிலவியது என்றும், ஆய்வாளர் கருதுகின்றனர். இக்காலங்களில் இயற்றப்பட்ட பல நூல்கள் அழிந்து விட்டன. இடைச்சங்க நூல்களில் தொல்காப்பியரும், கடைச்சங்க நூல்களில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கும் நமக்குக் கிடைத்துள்ளன. எனவே சங்ககாலத்தில் இயற்றப்பட்ட நூல்களில் மிகவும் பழமையானதாக நமக்குக் கிடைப்பது ஒல்காப்பெரும் புகழ் தொல்காப்பியமே ஆகும். நமது பழந்தமிழ் இசையைப் பற்றி விளக்கும் நூலாக தொல்காப்பியம் விளங்குகிறது. கிருஸ்து பிறப்பதற்கு 3 நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இசைபற்றிய சிறந்த அறிவுடையவராக விளங்குகின்றார்.

"இன்றைக்கு 8000 ஆண்டுகளுக்கு முன்பு விளங்கிய முதற்சங்கத்தில் இயல், இசை, நாடகத்தமிழ் செழித்து விளங்கியது ஆனால் அது பற்றிய குறிப்புகள் நமக்குக் கிடைக்காமல் விலைமதிப்பற்ற இசை நூல்கள் கடல் கோளாறால் அழிந்து விட்டன" என்று கருணாம்ருதசாகரம் என்னும் நூல் கூறுகிறது.

சங்க காலத்துக்கு முன்பே தமிழிசை தோன்றி வளர்ந்து பண்பட்ட நிலையில் விளங்கியிருக்கிறது. .தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் ஆகியவற்றிலிருந்து அக்காலத் தமிழிசை பற்றி ஓரளவு அறிய முடிகிறது. பண்டைய இசை தனித்தன்மையுடையதாக விளங்கியிருக்கிறது. ஏழிசைப்பகுப்பு, பண் அமைப்பு, கருவியிசை ஆகியவை பற்றி இலக்கியங்கள் கூறுகின்றன. இசையமைப்பு நன்றாக திருத்தமாக விதி முறைகளுக்குட்பட்டு இருந்தால்தான் விதிகளும், விளக்கங்களும் கொண்ட பல இசைத்தமிழ் நூல்கள் தமிழில் இருந்ததாக குறிப்புகள் காணப்படுகின்றன. தமிழில் இருந்து அழிந்து போன இசைத்தமிழ் நூல்களாக சிற்றிசை, பேரிசை, இசைநூல், இசை நுணுக்கம், பஞ்சமாபாரதீயம், பண் விளக்கம் போன்ற நூல்கள் குறிப்பிடப்படுகின்றன.

இசையும், இலக்கியமும் ஒன்றுடன் ஒன்று கலந்தே இருந்திருக்கின்றன. இலக்கியங்களில் 'பாட்டு' என்று அழைக்கப் பட்டிருக்கின்றன. குறிஞ்சிப்பாட்டு, பரிபாடல், பத்துப்பாட்டு என்ற பெயர்களை ஆராய்ந்தால் இது விளங்கும். எதுகை மோனையுடன் கூடிய இயற்றமிழ், சீர், தளை, அடி, தொடையுடன் சேர்ந்து நான்கு வகைப்பாக்களாகி சந்தத்தின் அடிப்படையில் தாளத்துடன்பாடப்பட்டபோது, இசைத்தமிழாயிற்று பண்ணோடு கூடிய இசைத்தமிழ், வசனத்துடனும், அபிநயத்துடனும் நடிக்கப்பட்டபோது, நாடகத்தமிழாயிற்று.

தொல்காப்பியம்

பண்டைத் தமிழரின் வாழ்வியல் செய்திகளை மிக இயல்பாக விளக்கும் இலக்கணம் நூல் தொல்காப்பியமாகும். 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரின் வாழ்வியலும், இசை பற்றிய குறிப்புக்களும் இதில் காணப்படுகின்றன. ஒலிதான் இசைக்கு அடிப்படை. ஒலி காற்றில் பிறக்கின்றது. ஒலியதிர்வு அறிவியக்கத்தால் முறைப்படுத்தப்பட்டு வெளியிடப்படுவதில் ஒலியலை உருவாகி செவிப்புலனில் பதிவாகிறது. இதனை வளியிசை என்று குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் வளி என்றால் காற்று என்று பொருள்.

அகத்தெழ வளியிசையரில் தப நாடி
அளபிற கோடலந்தணர் மறைத்தே
அஃதிவணுவலா தெழந்து புறத்திசைக்கு
மெய்தெரி வளியிசை யளவு
நுலன்றிசினே'

என்பது தொல்காப்பியம். மூலாதாரத்திலிருந்த எழுகின்ற காற்றின் இசை 'அகத்தெழுவளியிசை' என்பது நச்சினார்கினியர் விளக்கம் 'ஸ்வரராக சுதாரஸ' என்னும் கிருதியில் 'மூலாதாரஜநாத மெறுகுடே' என்று தியாகராஜ ஸ்வாமிகள் விளக்குவதை நாம் இங்கு நினைவு கூறுவது பொருத்தமாகும்.

தேவைக்கருதி எழுத்துக்கள் நீண்டு அள ஒலிக்கும்.

'அளபிறந்து உயிர்த்தலும்
ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப'

என்னும் சூத்திரத்தில் ஒலி நீள்வதை இசை நீட்டமாகக் கருதுகிறார் என்பது விளங்கும். இசை என்ற சொல் தொல்காப்பியத்தில் 24 இடங்களில் வந்துள்ளது. இசை என்று தொல்காப்பியர் பயன்படுத்திய இடங்களை ஆராய்ந்தால் ஏதோ ஒரு விதத்தில் இசைக்கலையுடன் தொடர்புடையதாக உள்ளது.

தொல்காப்பியர் அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம் என்றெல்லாம் பேசினாலும், பாட்டின் இசையமைப்பு இப்படி இருந்தது என்று அறிவதற்கு எந்த விளக்கமும் இல்லை என்பது தான் உண்மையாகும்.

தொல்காப்பியத்தில் மக்கள் தொழில் செய்ய உதவும் இசை, பொழுது போக்கிற்காக உதவும் கருவி இசை என்பதைப் பறை, யாழ் என்று குறிப்பிடுகிறார். ஐந்து நிலங்களுக்கும் உரிய இசை, இசைக்கருவிகள் என்று விளக்குகிறார். எடுத்துக்காட்டாக முல்லை நிலத்துக்குரிய தொழிலிசை ஏறுகோட்பறை, இன்பஇசை, சாதாரிப்பண் என்றும் குறிஞ்சி நிலத்திற்குரியதாக வெறியாட்குபறை, குறிஞ்சிப்பண் என்றும் குறிப்பிடுகிறார்.

பண்டைக் காலத்திலிருந்த தமிழ் மக்கள் நுட்பமான கலையுணர்வு மிக்கவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதைத் தொல்காப்பியம், தெளிவாகவும், உறுதியாகவும் கூறுகிறது.

பாட்டிடைக்கலந்த பொருளவாகி
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே

'ராகம்' என்று நாம் பேசும் ஆலாபனையைக் குறிக்கும் சொல்லாகப் பண்ணத்தி கருதப்படுகிறது. இசைக்கலையின் துல்லியமான வளர்ச்சியை இது குறிக்கிறது.

சங்க இலக்கியம்

முருகு பொருநராறு பாணிரண்டு முல்லை
ஸருகு வளம்துரைக் காஞ்சி மருவினிய

கோல நெடுநல்வாடை கோல் குறிஞ்சிபட்டினப்
பாலை கடாத்தொடும் பத்தே

*திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்.*

நற்றிணை நல்லகுறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த
பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல் கற்றறிந்தார்
ஏத்தும் கலியொடு அகம்புறமென
இத்திறத்த எட்டுத்தொகை

*நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.*

*சங்க இலக்கியங்களாகக் கருதப்படுபவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப்படும் இலக்கிய தொகுப்பு நூல்கள் ஆகும்.*

பரிபாடல்

*சங்க காலத்தில் விளங்கிய பாட்டு வகைகளில், மிகவும் சிறப்பாகக் கருதப்பட்டது பரிபாடல் ஆகும். இது இசையை உடையது, பரிந்து வருவது என்று விளக்கப்படுகிறது. இசைக்கு உரிய நல்ல அமைப்புடைய பாடலாக பரிபாடல் விளங்கியது.*

*பரிபாடல் அமைப்பைப் பற்றி தொல்காப்பியர் விளக்குகிறார். எந்தெந்த கருத்துக்கள் பரிபாடலில் இடம் பெறலாம். பரிபாடல் எந்தெந்த அமைப்பில் இருக்க வேண்டும் என்ற வரன்முறைகளைத் தொல்காப்பியர் வரையறை செய்து கூறியுள்ளார்.*

*பரி என்றால் அன்பு, உண்மை, பெருமை என்றும் பரித்தல் என்றால் காத்தல், தாங்குதல் என்றும் பலவிதமாகப் பொருள்படும். உயர்வான அன்பு, ஒழுக்கம் ஆகியவைகளையும் பெருமையான வாழ்வையும் இரக்க உணர்வையும் கொண்ட இசைப்பாடல்களாகப் பரிபாடலை கருதலாம். பரிபாடலின் அளவு பற்றிக் கூறும் தொல்காப்பியர்*

பரிபாட்டெல்லை
நாலீரைம்பது உயர்படியாக
வையைந்தாகும்
இழிபடித்தெல்லை

*என்று விளக்குகிறார். பரிபாடற்கு உறுப்பாகிய வெண்பாவுக்கு 400 அடி பெருக்கத்திற்கெல்லையாகவும் 25 அடி சுருக்கத்திற்கெல்லையாகவும் பெறும் என்பது*

பேராசிரியர் உரை. இளம் பூரணரும், நச்சினார்க்கினியரும் இச்சூத்திரம் பரிபாட்டுக்கு எல்லை கூறுகின்றது என்கிறார்கள்.

'கலியும், பரிபாடலும் போலும் இசைப்பாட்டு' என்கிறார் பேராசிரியர். "பரிந்த பாட்டு பரிபாட்டென வருமே". அஃதாவது ஒரு வெண்பாவாகி வருதலின்றி பல உறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது என்பார் இளம் பூரணா. இதிலிருந்து பரிபாடல் அமைப்பு முறையில் ஒரு தனித்தன்மை உடையது என்பதும் வரையறுத்துக் கூறும் அமைப்பில் இல்லை என்பதும் புலனாகிறது. பரிபாடலை வாய்மொழிப் பாடல்களின் வளர்ச்சியாகக் கருதலாம். உறுதிப்பொருள் நான்கினுள், இன்பத்தையே பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலைவிளையாட்டு, புனல் விளையாட்டு முதலிய கூறுவதாக அமையும்படி பாடப்பெற்றுள்ளதாக அறியலாம்.

சங்க இலக்கியத்தில் பரிபாடல் என்பது எட்டுத்தொகை நூல்களுள் ஐந்தாவதாக இடம் பெற்றுள்ளது. பாவகையை வைத்து பரிபாடலுக்கு அந்தப் பெயர் ஏற்பட்டது. பரிபாடல் என்பது ஒரு விதமான இசைப்பாவாகும். தொல்காப்பிய பொருளதிகாரத்தில் செய்யுளியல் 461 ஆம் சூத்திரத்திற்கு உரை எழுதிய பேராசிரியர் "நூற்றைம்பது கலியும் 70 பரிபாடலுமெனச் சங்கத்தார் தொகுத்தவற்றுள்" என்று கூறுவதால் 70 பரிபாடல்கள் இருந்தன என்று விளங்குகிறது. ஆனால் நமக்கு கிடைத்திருப்பது 22 செய்யுட்களேயாகும்.

பரிபாடலில் இரண்டாவது முதலிய பதினொன்றின் பண், பாலையாழ் என்றும் பதிமூன்றாவது முதலிய நான்கின் பண், காந்தாரம் என்று இருப்பதைக் காணும் போது இப்பாடல்கள் தேவாரங்களைப் போல் பண்முறையால் தொகுக்கப்பட்டு உரிய பண்களுடன் பாடப்பெற்று வந்திருக்கலாம் என்று தெரிகிறது. பிற்காலத்தில் பண்ணோடு பாடும் வழக்கம் இல்லாமல் போனதால் அந்த முறையை இப்போது சிறிதும் தெரிந்து கொள்ள இயலவில்லை என்று திரு உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார். (பரிபாடல் முன்னுரை).

பரிபாடலில் நமக்குக் கிடைத்துள்ள 22 பாடல்களுக்கும் இயற்றியவரின் பெயர் இசை அமைத்தவரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. என்ன 'பண்' என்ற குறிப்பும் கிடைக்கிறது. பரிபாடல் பற்றி 11ஆம் பரிபாடலில் கூறப்படுவது

"இன்னியல் மாண் தேர்ச்சி
இசை பரிபாடல்
முன்முறை செய்தவத்தின்
இம்முறை இயந்தேம்"

பரிபாடல் இனிமையானது. இசைத்தன்மை மிக்கது என்பது இவ்வரிகளிலிருந்து நாம் அறிய முடிகிறது. சங்க காலத்தில் இசைப்பாடல்கள்

வாய்மொழிப்பாட்டாக மட்டும் அமையாமல் இலக்கிய சிறப்போடு வளர்ந்திருந்தமைக்கும் பரிபாடல் நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

